# கல்கண்டு

## கேள்வி - பதில்

## தமிழ்ப் புத்தாண்டு மலர்

17-4-69 15 காசு

உள்ளே - எம். ஜி. ஆரும் ... வாஜியும் - கட்டுரை





ஆம்! நாங்கள் பத்திரிகை நடத்துகிறோம்! யாரந்த நாங்கள்? கல்லூரி மாணவர்கள்! சென்னை நகரிலே பல்வேறு கல்லூரிகளில் பயின்றுகொண்டு, இன்றைய மாணவர் சமுதாயத்தைக் கண்ணால் கண்டு, நெஞ்சால் உணர்ந்து, செயலால் ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்று நினைக்கின்ற மாணவர்கள்!

இந்தப் பாந்த நாட்டிலே கல்லூரிக்குச் சென்று படித்தவர்களின் சதவீதம் எத்தனை தெரியுமா? 1% தான். எதிர்காலத்தில் நாடே இந்த 1% மக்களின் தலைவிதியின்படி தான் பெரும்பாலும் நடைபெற்றாக வேண்டும்.

ஒரு நிமிடம்! ஒரே ஒரு நிமிடம் தற்போது கல்லூரிக்குச் சென்று திரும்பும் கல்லூரித் தோழர்களை மனத்திலே கற்பனை செய்து பாருங்

## நாங்கள் பத்திரிகை நடத்துகிறோம்



கல்லூரி மாணவர்கள்










கள்! இவர்கள் தாம் பெரும்பாலும் நாட்டின் தலைவர்களாக நாளை வரப் போகிறார்கள் என்று நினைத்துப் பார்க்கும் உங்களுக்கு உடம்பு நடுங்க வில்லை? நெஞ்சம் கலங்கவில்லை? இன்று பொறுப்பற்ற தன்மையையும் கலவரம் செய்யும்வித்தையையும்கல் லூரிப் பாடத்தோடு சேர்த்துக் கற்கும் நம் தோழர்கள் எப்படி நாளைய நாட்டை ஆளப்போகிறார்கள் என்ற கேள்விக்குறி தோன்றவில்லை?

இது உண்மை! நாளைய நாட்டின் தலைவிதி எப்படி நிருணயிக்கப்படப் போகிறது என்று சிந்தித்துப் பார்ப் பவர்களுக்குத் தோன்றும் கசப்பான இந்த உண்மை!

அதே நேரத்தில் நம் நாட்டையும் ஒரு நிமிடம் நினையுங்கள். இங்குள்ள அரசியல்வாதிகளையும், நாட்டின் பொருளாதாரத்தையும், எங்குச் சென்றாலும ஒழுங்கற்றுத் தோன்றும் மனிதர்களையும் கொண்ட இந்த நாட்டையும், நம்மைச் சூழ்ந்துள்ள உலக நாடுகளையும் பார்க்கும்போது நமக்குக் கீழும் ஒரு நாடு இருக்க முடியுமா என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது!

இந்த நிலையில் நம் நாடு சென்று கொண்டிருந்தால், இதன் முடிவு தான் என்ன? ஆயிரம் ஆண்டு காலமாகச் சேர்த்து வைத்த பழம் பெருமைகளோடு நாமும் மண்ணாவதைத் தவிர வேறு வழியில்லை!

இப்படி இருக்கும் ஒரு நிலையில் நாட்டின் அடித்தளமான மாணவர் களை, அந்தச் சமுதாயத்திலேயே நின்று பார்க்கும் எங்களுக்கு எங்கள் பத்திரிகையால் அவர்களைக் கொஞ்சமாவது சிந்திக்கவைத்தால், அதை விடப் பெரிய ஒரு சமூகத் தொண்டு, இந்த நேரத்திலே வேறு எதுவும் இருக்க முடியாது என்றுதோன்றியது!

'பத்திரிகை என்பது மிகக் கசப் பான அனுபவங்கள் நிறைந்த ஒரு துறை! இதைவிடக் கடினமான ஒரு

---

1. இலயோலா கல்லூரியைச்சேர்ந்த திரு. வேங்கடராமணி 2. பொறியியற் கல்லூரியைச் சேர்ந்த திரு. வில்லியம் பெர்னாண்டஸ் 3. திரு. இ. சுந்தர்.










தொழில் கிடையாது' என்று திரு. தமிழ்வாணனே எங்களிடம் ஒரு முறை கூறினார்!

கசப்பான அனுபவங்களால், இனிப் பான எதிர்காலத்தைப் படைக்க முடியுமானால், துயர அனுபவங்களை ஏற்பதையே ஒரு பேறாக நாங்கள் கருதுகிறோம்!

மிகப் பெரிய மூலதனத்தோடு தமிழகத்தில் தொடங்கப்பட்ட பல பத்திரிகைகள், மிகச் சீக்கிரமே தோல்வியடைந்து கண்ணீரோடு, தங்களை ஆதரிக்கத் தவறிய இந்த சமுதாயத்தைவிட்டு மறைவதைக் காண்கிறோம். இந்நிலையில் வெறும் மாணவர்கள்; அதுவும் பொருளாதாரத்தில் மிகவும் வசதி படைத்தவர்கள் என்று கூற முடியாத அளவிற்கு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் நாங்கள், இத்தோடு 12 இதழ்களை மாதம் ஒன்றாக வெளியிட்டிருக்கிறோம்!

சென்ற ஆண்டுத் தொடக்கத்தில், நாங்கள் சில மாணவர்கள், நாங்கள் பத்திரிகை நடத்த விரும்புகிறோம் என்று S. I. V. E. T கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் இராசேந்திரனை அணுகியபோது அவர், மிகவும் மகிழ்ந்தார். வாய்ச்சொல் லாலே ஆதரவு கொடுத்தது மட்டுமின்றி, தான் முன்பு நடத்திப் பிறகு கைவிட்ட 'பூச்செண்டு' என்ற பத்திரிகையையே எங்களுக்கு அளித்து "மாணவர் திங்களிதழாகப் பூச்செண்டு இனி வளரட்டும்" என்று ஆசியளித்து, தனது இல்லத்திலே ஓர் அறையை எங்களுக்கு அலுவலக மாக வசதி செய்து கொடுத்தார்! முதல் இரு திங்களுக்கு அவரே பொருள் வசதியளித்தார்!

பத்திரிகையின் தொடக்கத்திலே பி. எஸ்ஸி முடித்துவிட்டு எம். ஏ. சேர இருந்த திரு. சுந்தர், பணியாற்றிக்கொண்டேமாலைநேரப்பொறி

---

4. பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த திரு. ஜெயினுலாவுதீன் 5. கிறித்துவக் கல்லூரியைச் சேர்ந்த மெர்வின் 6. மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த திரு. ஜெயவேலன்.

□ இத்தாலியத் தத்துவ மேதை என்றுஅழைக்கப்படும் ஆல்டோ பிரைபாண்டி இப்போது சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டு சிறையில் இருக்கிறார். இவருக்கு ஒன்பது ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இவர் செய்த குற்றம், இரண்டு இளைஞர்களுக்கு 'மூளைச் சலவை' செய்து அவர்களைத் தன்னுடைய அடிமைகளாக ஆக்கிக் கொண்டது! இந்த மாபெரும் குற்றம் செய்ய, இந்த மேதை, எறும்பு களிடமிருந்து ஒரு பெரிய உண்மை யைக் கண்டுபிடித்ததாகச் சொல்லு கிறார். அது என்ன உண்மை? பலம் பொருந்திய எறும்புகள், பல மற்ற எறும்புகள் மீது ஆதிக்கம் செலுத்தி அவைகளை அடிமைப்படுத்திக் கொள் கின்றன. பிறகு தங்கள் எண்ணப்படி அவைகளை ஆட்டிவைக்கின்றன. இந்த நிதர்சனமான உண்மையைப் பார்த்த பிறகே இந்த இளைஞர்களைத் தன் ஏவலுக்கு அடிபணிய வைத்தாராம் ஆல்டோ பிரைபாண்டி!

---

யியற் கல்லூரியில் ஏ. எம். ஐ. இ. பயிலும் மாணவர் திரு. வில்லியம் பெர்னாண்டஸ் ஆகிய இருவரும் மிகத் தீவிரப் பங்கேற்றுப் பல போராட்டங்களைச் சந்தித்தனர்.

சில தினங்களில் மாணவர் சமு தாயத்தை ஆக்கப் பாதை நோக்கி நகர்த்திச் செல்லுவதையே விருப்ப மாகக் கொண்டவர்களும், இப்பணி யில் தீவிர ஆர்வமும் கொண்ட நால்வர் சேர்ந்து பூச்செண்டின் பணிகளைப் பகிர்ந்து கொண்டனர். அவர்கள்: சென்னை மருத்துவக் கல் லூரியைச் சேர்ந்த திரு. ஜெய வேலன், பச்சையப்பன் கல்லூரி தமிழ்ச் செயலாளர் திரு. ஜெயினு லாபுதீன், இலயோலா கல்லூரியைச் சேர்ந்த திரு. வேங்கடரமணி, சென்னை கிறித்துவக் கல்லூரியின் திரு. மெர்பின் ஆகியோர்.

நாங்கள் ஆறு பேரும் தமிழகத் தின் ஆறு வெவ்வேறு மாவட்டங் களைச் சேர்ந்தவர்கள்; வெவ்வேறு மதத்தினர்; எப்படி எப்படியோ நாங்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்த தற்குக் காரணம் எங்கள் இலட்சி யம்தான்!

பல பத்திரிகைகள் தோல்வியுறும் போது வெறும் மாணவர்கள், அது வும் படித்து வருபவர்கள், மீதி நேரத்தை வைத்து எப்படி இதைச் செய்ய முடிகிறது என்று நீங்கள் கேட்பது எங்கள் காதுகளில் ஒலிக் கின்றது! இதற்கு ஒரே பதில், எங்கள் ஆர்வமும் உழைப்புந்தாம்!

எழுத்தின் வன்மையிலே எங்க ளுக்கு மிகப் பெரும் நம்பிக்கை இருக்கிறது. உலகம் இதுவரை கண் டிராத சமுதாயப் புரட்சிகளைச்சென்ற சிலநூற்றாண்டுகளாகப் பேனா முனை சாதித்திருக்கின்றது. ஆகையால் இந்தத் தாழ்வுபட்ட சமுதாயத்தைச் சீர்தூக்கி, ஒரு புதிய சமுதாயத்தை மறுபடியும் இந்த நாட்டிலே பேனா முனை சாதித்துக் காட்ட முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எங்களுக்குண்டு.

சமுதாயத்தில் ஒரு புதிய வியா பாரமாகத் தோன்றியிருக்கும் அர சியல் கட்சிகளால், எதனையும் இந்த நாட்டில் புதிதாகச் செய்ய முடியும் என்று எங்களுக்கு நம்பிக்கையில்லை! இனித் தொடர்ந்து இந்த நவீன வாணிபத்தில் மாணவர்கள் சரக்குப் பொருட்களாக விலைபோவதைத் தடுக்க நாங்கள் உறுதியாகப் போராடு வோம்! உறுதி!

மாணவரும் அதன் வழி வரப் போகும் நாடும் ஆக்கப் பாதை நோக்கிச் செல்ல நாங்கள் செய்யும் இந்த எழுத்துலக முயற்சியைத் தமி ழகம் நன்குணர்ந்து எங்களைச் சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டுகிறோம்.

ஆசிரியர் குழு.

பூச்செண்டு,

19, நௌரோசி வீதி,

சென்னை—31.